பக்கங்கள் 19+ 03

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 14 புதன்கிழமை 30.07.2025 | அதிர்வு 361

## இராணுவத் தளபதியின் பதவிக் காலம் நீடிப்பு



இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிகோவின் பதவிக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி,

02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்






# சம்பூரில் மனித என்பு எச்சங்கள்: அகழ்வு செய்வதா? இல்லையா?

## ஓகஸ்ட் 6 ஆம் திகதி விசேட கூட்டம் மூதூர் நீதிமன்றம் இன்று தீர்மானம்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை, சம்பூரில் மனித எலும்பு எச்சங்கள் கண்டெடுக்கப்பட்ட இடத்தில் தொடர்ந்து அகழ்வு செய்வதா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்க எதிர் வரும் ஓகஸ்ட் 6 ஆம் திகதி விசேட கூட்டம் ஒன்றை நடத்த வேண்டும் என்று மூதூர் நீதிவான் நீதிமன்றம் இன்று தீர்மானித்துள்ளது.

இந்தக் கூட்டத்தில் தொல்பொருள் திணைக்களம், தடயவியல் பிரிவினர், சட்ட வைத்திய அதிகாரி, புவிச் சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் பணியகம், குற்றவியல் பிரிவினர், தேசிய நிலக்கண்ணிவெடி அகற்றும் நிறு வனத்தினர், பொலிஸ் திணைக்களம் என்பனவற்றின் அலுவலர்கள் நீதிவான் திருமதி தஸ்னீம் பௌசான் தலைமையில் ஒன்றுகூடி ஆராய்வது என்றும், அதன் பின்னர் எடுக்கப்படும் தீர்மானத்துக்கு அமைய இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் இன்று தீர்மானிக்கப்பட்டது.

02

## நாவற்குழியில் காணாமல் ஆக்கப்பட்ட 22 இளைஞர்கள் தொடர்பான வழக்கு:

# ஓகஸ்ட் 28 ஆம் திகதி தீர்ப்பு



(த.சுபேசன்)

யாழ். நாவற்குழிப் பகுதியில் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட 22 இளைஞர்கள் தொடர்பான ஆட்கொணர்வு மனு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி தீர்ப்புக்காகத் திகதியிடப்பட்டுள்ளது.

கடந்த 1996ஆம் ஆண்டு நாவற்குழிப் பகுதியில் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட 22 இளைஞர்கள் தொடர்பான ஆட்கொணர்வு மனு யாழ். மேல் நீதிமன்றத்தில்

04

# கல்முனை வடக்கு உப பிரதேச செயலக வழக்கு: அடுத்த வருடம் ஜனவரி 28 இற்கு ஒத்திவைப்பு!

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தைத் தரம் உயர்த்தக் கோரிய வழக்கு 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தைத் தரம் உயர்த்தக் கோரி வழக்குத் தொடர்ந்தார்.

இது குறித்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இன்று விசாரணை நடைபெற்றது.

வழக்கில் இடையீட்டு மனுதாரர்களாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் மற்றும் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் எம்.ஏ. கலீலுர் ரஹ்மான் இருந்தனர்.

அவர்களது பிரதிநிதிகளான ஜனாதிபதி சட்டத்தரணிகள் சஞ்சீவ ஜெயவர்த்தன மற்றும் பைஸர் முஸ்தபா தலைமையிலான குழு மற்றும் தவராசா கலையரசன் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தலைமையிலான சட்டத்தரணிகள் குழு நீதிமன்றில் ஆஜராகினர்.



இரு தரப்பும் தங்களது வாதங்களை முன்வைத்திருந்தபோதும் மேலதிக வாதங்கள் மற்றும் சமர்ப்பிப்புகளுக்காக வழக்கு அடுத்த ஆண்டு ஜனவரி 28ஆம் திகதிக்காக ஒத்திவைக்கப்பட்டது.

இன்றைய விசாரணையின் போது பிரதிவாதர்கள் ஹரீஸ் மற்றும் கலீலுர் ரஹ்மான் பிரசன்னமாகியிருந்தனர்.

# சர்வதேச சகோதரிகள் தினமும் பெண்களுக்கு அரிய வாய்ப்பும்

புதிய அலை கலை வட்டத்தின் மகளிர் அணி எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி மலரவுள்ள சர்வதேச சகோதரிகள் தினத்தைக் கொழும்பு - 13, புதுச்செட்டித் தெருவில் அமைந்துள்ள எக்ஸலனஸ் சர்வதேச பாடசாலையில் வளாகத்தில் மாலை 4 மணிக்குக் கொண்டாடவுள்ளது என்று அதன் தலைவி ரஞ்சனி சுரேஷ் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பாடசாலை நூலகங்களுக்கு நூல்கள் வழங்குதல், பெண் பிள்ளைகள் தங்கியிருக்கும் காப்பகங்களுக்கு உடைகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் வழங்குதல் என்பன இடம் பெறவுள்ளன.

இதில் விசேட அம்சமாகப் பெண்கள் மட்டும் கலந்துகொள்ளும் குறும்படத்துக்கான கதை சொல்லும் நிகழ்வு ஒன்றும் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நேரில் கலந்துகொண்டு கதை சொல்ல முடியாதவர்கள் பிரதிகள் மூலம் கலந்து கொள்ள முடியும்.

பிரதிகள் அன்றைய தினம் வாசிக்கப்பட்டு அவையோரின் தீர்ப்புக்கு ஏற்ப ஒரு கதை தெரிவு செய்யப்படுவதுடன் அது திரைவடிவம் பெறும். இதில் கலந்துகொள்ள விரும்புவோர் 075 4880172 என்ற வட்சப் இலக்கத் துடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங் களை அறியலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.




## சம்பூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய தரப்புகளுக்கான அழைப்பை சம்பூர் பொலிஸார் அனுப்ப வேண்டும் எனவும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 25 ஆம் திகதி மூதூர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கு அமைய இன்று சட்ட வைத்திய அதிகாரி மன்றுக்கு அறிக்கையை முன்வைத்தார். அதன்படி கண்டெடுக்கப்பட்டுள்ள எலும்பு எச்சங்கள் மிகவும் பழைமையானது என்று குறிப்பிட்டிருந்தார்.அதேவேளை தொல்பொருள் திணைக்களத்தினர் முன்வைத்த அறிக்கையின்படி இவ்விடத்தில் முன்னர் மயானம் ஏதாவது இருந்துள்ளதா என்பதைத் துல்லியமாகக் கூற முடியாதுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் தீர்மானம் ஒன்றுக்கு வருவதாயின் இந்த அகழ்வுடன தொடர்புடைய சகல தரப்புகளுடனும் இணைந்து கலந்துரையாட வேண்டிய நிலை உள்ளதால் அதற்கான நடவடிக்கை எடுப்பது என்று நீதிமன்றம் தீர்மானித்தது.

கடந்த 19 ஆம் திகதி சம்பூர் பிரதேசத்தில் மிதிவெடி அகற்றும் பிரிவினர் அகழ்வில் ஈடுபட்ட போது மனித மண்டையோடு மற்றும் எலும்பு எச்சங்கள் என்பன வெளிவந்தன. இதனையடுத்து அகழ்வு வேலைகள் மூதூர் நீதிமன்ற உத்தரவின் படி இடைநிறுத்தப்பட்டன. அதனையடுத்து 25 ஆம் திகதி இடத்தைப் பார்வையிட்ட நீதிவான் நேற்று வரை அகழ்வை இடைநிறுத்த உத்தரவிட்டிருந்தார். அத்துடன் சட்ட வைத்திய அதிகாரி மற்றும் தொல்பொருள் பிரிவினர் அகழ்வைத் தொடர்வதா, இல்லையா என்பதைத் தீர்மானிக்க நீதிமன்றத்துக்கு அறிக்கை தர வேண்டும் எனவும் உத்தரவிட்டிருந்தார்.

## இராணுவத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் ஒரு வருட சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது என்று இலங்கை இராணுவத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். இந்தப் பதவி நீடிப்பு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் வழங்கப்பட்டுள்ளது.



# அச்சுவேலியில் இளைஞரின் சடலம் மீட்பு!

அச்சுவேலியில் மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி இளைஞர், அருகில் உள்ள ஆலயத்தில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியில் கலந்துவிட்டு வீடு திரும்பும்போது வீட்டுக்கு முன்னால் மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளார்.

இளைஞர் இவ்வாறான நிலையில் காணப்படுவதைப் பார்த்த உறவினர்கள் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று அனுமதித்த போதும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

செல்வச்சந்திரன் மிமோஜன் எனும் 27 வயதுடைய இளைஞரே உயிரிழந்தவராவார்.

அவரது கால் பாதத்தில் பாம்பு தீண்டிய அடையாளம் காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# மூதூரில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு!



திருகோணமலை, மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூதூர் சந்தைக்குப் பின்புறமாகவுள்ள வாய்க்காலினுள் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் இன்று மீட்கப் பட்டுள்ளது.

மூதூர், பாலநகரைச் சேர்ந்த 43 வயதுடையரே உயிரிழந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மேற்படி நபர் இன்று புதன்கிழமை அதிகாலை 2 மணியளவில் மீன்பிடிக்கச் சென்றிருந்தார் என்று தெரியவந்துள்ளது.

மேலும், அந்த நபர் உயிரிழந்தமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், சம்பவம் தொடர்பில் மூதூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





## ஒகஸ்ட் 28 ஆம் திகதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அந்த வழக்கானது தீர்ப்புக்காக இன்று திகதியிடப்பட்டிருந்தது.

சம்பவம் நடைபெற்ற பகுதியானது சாவகச்சேரி நீதிமன்றத்தின் நியாயாதிக்க எல்லைக்குள் உட்படுவதால் அந்த வழக்கு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வந்தன.

இருப்பினும் நீதிவான் இன்று விடுமுறையில் இருந்த காரணத்தால் வருகின்ற ஒகஸ்ட் மாதம் 28ஆம் திகதி குறித்த வழக்குத்தீர்ப்புக்காகத் திகதியிடப்பட்டுள்ளது.









# கொள்ளையர் சங்கிலியை அறுத்தபோது படுகாயமுற்ற வயோதிப மாது உயிரிழப்பு

## மட்டக்களப்பு நகர் நல்லையா வீதியில் சம்பவம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நகரில் வீட்டின் முன் வீதியைத் துப்பரவு செய்து கொண்டிருந்த வயோதிப பெண் ஒருவரின் கழுத்தில் இருந்த தங்க சங்கிலியை அறுத்தெடுத்து அவரை வீதியில் தள்ளி வீழ்த்தி விட்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்ற சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட வயோதிபப் பெண் சிகிச்சை பலனின்றி இன்று புதன்கிழமை உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு நகர், நல்லையா வீதியைச் சேர்ந்த 81 வயதுடைய மகேஸ்வரி சரவணமுத்து என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு இந்த வயோதிபப் பெண் தனது வீட்டின் முன்னாள் உள்ள வீதியை துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். இந்தநிலையில் அங்கு மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இருவர் பெண்ணின் கழுத்தில் இருந்த சுமார் 3 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை அறுத்தெடுத்துக் கொண்டு அவரை வீதியில் தள்ளி வீழ்த்தி விட்டுத் தப்பி ஓடியுள்ளனர்.

இதனையடுத்து வீதியில் வீழந்தவர் படுகாயமடைந்த நிலையில் மட்டு. போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பலனின்றி இன்று காலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தையடுத்து மட்டக்களப்பு நீதிவான் இந்தச் சம்பவம் இடம்பெற்ற பகுதிக்குச் சென்று விசாரணை செய்தார். சடலம் வைக்கப்பட்டிருக்கும் மட்டு. போதனா வைத்தியசாலைக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டமையுடன் பிரேத பரிசோதனைக்கும் உத்தரவிட்டார்.

இதேவேளை இந்தக் கொள்ளையர்களை வலைவிரித்துத் தேடி வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.






நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ட்ரம்பின் அதி மேதாவித்தனம்

'உள்ளதையும் கெடுத்தான் நொள்ளைக் கண்ணன்' என்பார்கள். அந்த மாதிரி குசும்புத்தனமான பொருளாதார நடவடிக் கைகள், அடாவடித்தனமான எச்சரிக்கை கள், முரட்டுத்தனமான விதிமுறைகள், கண்மண் தெரியாத வரி அறவீட்டு அறிவிப் புகள் என்று மாறி மாறிப் பிரகடனப்படுத்தி, சர்வதேச பொருளாதார சம நிலைமையில் பெரும் குளறுபடிகளைப் பண்ணி வைத் திருக்கின்றார் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்.

'தன்வினை தன்னைச் சுடும்' என்பது போல அவரது பொருளாதார வரிவிதிப்பு கள் தொடர்பான திமிர்த்தன அறிவிப்புகள் அமெரிக்காவையும் பெருமளவில் பாதிக் கும் நிலைமை வந்திருப்பதாக சர்வதேச செய்தி நிறுவனங்கள் தகவல் வெளியிட் டிருக்கின்றன.

அதிகாரத்தை வைத்துக் கொண்டு, குசும்புத்தனம் பண்ணும் ஒருவரை நாட் டின் தலைவராகத் தேர்ந்தெடுத்த தவறுக் காக அமெரிக்க மக்களும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும் நிலைமை வரலாம் என செய்தி நிறுவனங் களை எச்சரிக்கின்றன.

நாடுகளுக்கு இடையேயான பொருளா தார சமநிலையில் பெரும் தளம்பலை ஏற்படுத்திய அமெரிக்க ஜனாதிபதியின் அறிவிப்பு, அவரது நாட்டுக்கும் பெரும் பின்னடைவை தரப் போவதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

நேரடியாகவும் மறைமுகமாகவும் அமெ ரிக்காவில் முதலீடுகளை செய்து வந்த சீனா - குறிப்பாக பெருமளவில் செய்து வந்த சீனா - இப்போது அமெரிக்காவில் முதலீடு செய்வதை முற்றாக நிறுத்தி விட்டது. அது மாத்திரமல்ல, ஏற்கனவே அமெரிக்காவில் செய்யப்பட்ட முதலீடு களை இயன்ற வரையில் விரைந்து கைவாங்குமாறு தன்னுடைய வெளிநாட்டு முதலீட்டுப் பிரிவுகளுக்கு சீன அரசாங்கம் நான்கு, ஐந்து மாதங்களுக்கு முன்னரே இரகசியமாக உத்தரவிட்டு, அந்த நடவ டிக்கை முழுஅளவில் முன்னெடுக்கப்படுவ தாக இப்போது செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

இந்தப் பாதிப்பு அமெரிக்காவினுடைய பங்குச்சந்தையிலும், அமெரிக்க டொலரின் மதிப்பிலும் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்தி வருவதாக பொருளாதார நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். அடுத்து வரும் மாதங்களிலும் எதிர்காலத்திலும் மிகுந்த நெருக்கடியை இதனால் அமெ ரிக்கா எதிர்கொள்ளும் என்று அந்த நிபுணர்கள் எதிர்வு கூறுகின்றனர்.

பொருளாதார ரீதியில் உலக நாடுகள் அனைத்தோடும் - பெரும்பாலும் முக்கிய நாடுகள் அனைத்துடனும் - பொருளாதார யுத்தத்தைப் பிரகடனப்படுத்தி, திறந்திருக் கும் அமெரிக்கா அதிபர், அதனால் அமெ ரிக்க பொருளாதாரத்துக்கு ஏற்படக்கூடிய நலிவு குறித்து சிந்திக்கவில்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது.

அமெரிக்க பிணைமுறி மீது செய்து வந்த முதலீடுகளையும் சீனா விலக்கிக் கொண்டு வருவதாக கூறப்படுகின்றது.

அமெரிக்காவைத் தவிர்த்து பிற பாதுகாப்பான நாடுகளில் - குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் - தன் முதலீடு களை சீனா மேற்கொண்டு வருகின்றமை யால், மத்திய கிழக்கு நாடுகளின் பொரு ளாதாரம் மேம்படுவதோடு, அமெரிக்க பொருளாதாரத்தில் நெருக்கடி ஏற்பட வாய்ப்பு இருப்பதாக சுட்டிக்காட்டப்ப டுகின்றது.

எது, எப்படியாயினும், சீனப் பொருளா தாரக் கட்டமைப்பு என்பது உலகில் வல்லாதிக்க மிக்க ஒரு வலைப் பின்னலா கும். அதனோடு தேவையில்லாமல் அமெ ரிக்கா ஆரம்பித்திருக்கும் முட்டாள்தன மான பொருளாதாரப் போர், கடைசியாக அமெரிக்காவுக்கு 'ஷேம் ஸைட் கோல்' போன்ற நிலைமையை ஏற்படுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

காலம் காலமாக தன்னோடு அணி சேர்ந்து நின்ற அயல் நாடான கனடா போன்றவற்றோடும், நேட்டோவின் பிற அங்கத்துவ நாடுகளோடும் பொருளாதார ரீதியில் பகைமை உணர்வை வெளிப் படுத்தி நிற்கும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் திமிர்த்தன அரசியல் நிலைப்பாடு, அந்த நாட்டுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தித் தரும் என்ப தைத் தன்னுடைய ஆட்சி காலத்தின் முடி வின்போது நிச்சயமாக டொனால்ட் ட்ரம்ப் பட்டறிவாக பெற்றிருப்பார் என்பது உறுதி.

# வலுவிழந்தோர் விற்பனை நிலையம் நிலாவெளியில் திறந்து வைப்பு

(எச். எம். ஹலால்தீன் )

கிழக்கு மாகாண கைத்தொழில் திணைக்களத்தால் குச்சவெளி பிரதேச சபைக்கு உட்பட்ட, நிலாவெளிக் கடற்கரையில் வலுவிழந்தோருக்கான விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

வலுவிழந்தோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் அவர்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்பனை செய்யும் நிலையமே இவ்வாறு திறந்து வைக்கப்பட்டது.

சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் உள்ளூரில் கிடைக்கக் கூடிய இலகுவான பொருள்களைக் கொண்டு செய்யப்பட்ட விற்பனை நிலையம் அவர்களின் வாழ்வாதாரத்தில் பெரிதும் மாற்றத்தை ஏற்படுத்தும் என தவிசாளர் தெரிவித்தார்.

உள்ளூர் வெளியூர் சுற்றுலா பயணிகள் இவ்வாறான பொருள்கள் மீது ஆர்வம் உடையவர்களாகவும், அவற்றை கொள்வரவு செய்யக் கூடியவர்களாகவும்காணப்படுகின்றனர். இவ்வாறு கொள்வனவு செய்யும் போது வலுவிழந்தோரது எதிர்காலம் சிறக்க வாய்ப்பாக அமையும் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் கே. முபாரக், பிரதேச சபை உறுப்பினர் ஜே. நிமலஹாசன், மாகாணத் திணைக்களப் பணிப்பாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.







# சமுர்த்தி பயனாளிக்கு தொழில் முயற்சி கடன்

திருநெல்வேலி சமுர்த்தி வங்கியால், நல்லூர் பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட தொழில் முயற்சியாளரான சமுர்த்தி பயனாளிக்கு புதிய தொழில் முயற்சி கடன் வழங்கப்பட்டுள்ளது.

முதன் முதலாக 20 லட்சம் ரூபா நல்லூர் பிரதேச செயலரால் நேற்று (29) வழங்கி வைக்கப்பட்டது.





# தேசிய முன்பிள்ளைப் பருவ வாரத்தில் போசாக்கு தொடர்பில் விழிப்புணர்வு!

தேசிய முன்பிள்ளைப் பருவ வாரத்தை முன்னிட்டு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கோவில்வயல், இயக்கச்சி, சோரன்பற்று, முல்லையடி, புலோப்பளை, முகமாலை, கிளாலி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள முன்பள்ளிகளின் சிறார்களின் பெற்றோர்களுக்கு பிள்ளைகளின் விருத்தியில் பாதுகாப்பு, சுகாதாரம், போசாக்கு எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன என்பது தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்வுகள் அண்மையில் குடும்ப நல சேவை உத்தியோகத்தகளால் நடத்தப்பட்டது.அத்துடன் பிள்ளைகளின் விருத்தி யில் சுகாதாரம், போசாக்கு, பாதுகாப்பு உள்ளிட்ட முக்கிய விடயங்கள் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன என முன் பள்ளி ஆசிரியர்களுக்கான செயலமர்வு பிரதேச குடும்ப நல சேவையாளர்களால் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.








# சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளால் பருத்தித்துறை மீனவர் பெரும் பாதிப்பு!

இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய மீன்பிடி மற்றும் உள்ளூர் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளால் பருத்தித்துறை மீனவர்கள் பாதிக்கப் பட்டுள்ளனர்.

யாழ். வடமராட்சி – பருத்தித்துறை கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையால் யாழ். மாவட்ட மீனவர்களின் வலைகள் அழிக்கப்பட்டு வருகின்றன என்று கடற்றொழிலாளர்கள் கவலை வெளி யிட்டுள்ளனர்.

குறிப்பாகப் பருத்தித்துறை கடற் பரப்பில் கடந்த சில தினங்களாக எல்லை தாண்டி இந்திய தீனவர்களது இழுவைமடி படகுகளின் மீன்பிடி அதி கரித்துள்ளது.

இதனால் நாளாந்தம் எமது வலை கள் அறுத்தழிக்கப்பட்டு வருகின்றன. இதனால் பல லட்சம் ரூபா பெறுமதியான வலைகள் இழுவைப் படகுகளால் அறுத்தழிக்கப்படுகின்றன. வலைகள் காணாமல் போவதாகவும் கடற்றொழிலா ளர்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் இரவும் இந்திய மீனவர்களது இழுவைப்படகுளின் எல்லை தாண்டிய மீன்பிடியால் பருத் தித்துறை பகுதி கடற்றொழிலாளர்களது வலைகள் அழிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் உள்ளூரில் சட்டவிரோத மீன்பிடியான சுருக்குவலைத் தொழில் நடவடிக்கையால் எமது வாழ்வாதாரம் கேள்விக் குறியாகி வருகிறது. இதனைக் கட்டுப்படுத்த மீன்பிடி அமைச்சர் நடவ டிக்கை எடுக்க வேண்டும். இந்திய மீனவர்களின் அத்துமீறலையும் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கடற்றொழி லாளர்கள் வேண்டுகோள் விடுத்துள் ளனர்.



# கைதடியில் மக்கள் பங்களிப்பில் பற்றைக் காணிகள் துப்புரவு

## பிரதேச சபை உறுப்பினர் சிவபாதம் முன்மாதிரி

(த.சுபேசன்)

சாவகச்சேரி பிரதேச சபை எல் லைக்கு உட்பட்ட கைதடிப் பகுதியில் நீண்ட காலமாக எந்தவிதமான பராம ரிப்பும் இன்றிக் காணப்பட்ட தனியார் காணிகள் பிரதேச சபை உறுப்பினர் சிவபாதத்தின் முயற்சியில் மக்கள் பங் களிப்போடு துப்பரவு செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பாக சாவகச்சேரிப் பிர தேச சபையின் கைதடி வட்டார உறுப் பினர் க.சிவபாதம் கருத்து தெரிவிக் கையில்,

பொது மக்கள் தங்களது வீடுகள், காணிகள், வீதிகள் மற்றும் சுற்றுப் புறங்கள் சுத்தமாக இருப்பதற்கு தங் களது பங்களிப்பையும் செய்வதற்கு முன்வர வேண்டும்.

அத்துடன் வீதிகளில் குப்பைகள் கொட்டுவது, கொட்டிய குப்பைகளை வீதிகளில் போட்டு எரிப்பது, தார் வீதிக ளில் சிமெந்து இட்டுக் குழைப்பது போன் றன தடை செய்யப்பட்டுள்ளது.

பொது இடங்களில் வெற்றிலை துப்புவது, வீதிகள் மற்றும் தனியார் காணிகளில் மது அருந்திவிட்டு மது போத்தல்களை வீசுவது, நீண்டகாலம் வீதிகள் அருகில் கல், மணல் போன்ற வற்றைப் பறித்து வைத்திருப்பது போன்ற செயற்பாடுகளும் தடை செய் யப்பட்டுள்ளது.

வீதி விளக்குகளின் வெளிச்சம் முழுமையாக வீதிகளில் கிடைக்காமல் இருக்கக் கூடிய வகையில் வேலிகளை அதியுயரமாக வளர்த்து வைத்திருப்பதும் தடை செய்யப்பட்டுள்ளது.

பொது மக்கள் தாமாக முன்வந்து இவ்வாறான செயற்பாடுகளுக்கு முன்வர வேண்டும் என்று அவர் மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.





# பிரமிட் திட்டங்களுக்கு எதிரான விழிப்புணர்வு நல்லூரில்

நல்லூர் பிரதேச செயலக அலுவலர்களுக்கான பிரமிட் திட்டங்களுக்கு எதிரான தேசிய விழிப்புணர்வு நிகழ்வு நேற்று முன்தினம் (28) பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் தலைமையில் இடம்பெற்றது.

விழிப்புணர்வு நிகழ்வின் வளவாளராக இலங்கை மத்திய வங்கியின் கிளிநொச்சி பிராந்திய சிரேஷ்ட முகாமையாளர் கே. தர்மேந்திரன் கலந்து கொண்டு பிரமிட் தொடர்பான கருத்துக்களை வழங்கினார்.



நிகழ்வில் பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் உட்பட கிராம சேவையாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய பொது மக்களுடன் தொடர்புடைய கள உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.







### ஒரு மில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட உதவிகளை

# மலையகத்து உறவுகளுக்காக வழங்கிய சந்நிதியான் ஆச்சிரமம்

மலையகத்தில் பதுளை பண்டாரவளை பகுதிகளை சேர்ந்த பாடசாலைகள், ஆலயங்கள், மற்றும் வாழ்வாதாரம், மருத்துவ உதவிகள் என ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட உதவிகளை தொண்டைமானாறு சந்நிதியான்ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் அமுத கலாசுரபி கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் நேரடியாகச் சென்று வழங்கினார்.

எட்டாம்பிட்டிய தோட்டம், 2 ஆம் பிரிவில் வசிக்கும் பொருளாதாரத்தால் நலிவடைந்த குடும்பம் ஒன்றுக்குச் சுயதொழில் உதவியாக ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான தையல் இயந்திரம் வழங்கப்பட்டது.

பிட்டமாறுவ, சோபேரி டிவிசன் பிரிவில் வசிக்கும் பொருளாதாரத்தால் நலிவடைந்த குடும்பம் ஒன்றுக்குச் சுயதொழில் உதவியாக ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான தையல் இயந்திரம் வழங்கப்பட்டது.

பண்டாரவளை, நாயபெத்தை தோட்டத்தை சேர்ந்த சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்காக மருத்துவ உதவியாக 50 ஆயிரம் ரூபா நிதி



வழங்கப்பட்டது.

பண்டாரவளை, சௌதம் தமிழ் மகா வித்தியாலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, 750 மாணவர்கள் கல்வி கற்கும் இந்தப் பாடசாலையில் ஒளி, ஒலி அமைப்பின் சாதனங்கள் 2 லட்சம் ரூபா பெறுமதியில் வழங்கப்பட்டது.

ஹப்புத்தளை ஹகல தமிழ் வித்தியாலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, 106 மாணவர்கள் கல்வி கற்கும் இந்தப் பாடசாலையில் பான்ட் வாத்தியக் கருவிகள் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியில் வழங்கப்பட்டது.

எட்டாம்பிட்டிய விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, 650 மாணவர்கள் கல்வி கற்கும் இந்தப் பாடசாலையில் மைதான நிழற் குடை (மேடை) அமைப்பதற்கு 2 லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

ஹப்புத்தளை பிரதேசத்தில் அமைந்துள்ள பண்டாரவளை, விஹார கலை தமிழ் வித்தியாலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, பாடசாலை கட்டடப் பணிக்காக 2 ஆம் கட்டமாக ஒரு லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

மோதரை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, கட்டடப் பணிக்காக 2 லட்சம் ரூபா நிதி முதலாம் கட்டமாக வழங்கப்பட்டது.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று உதவிகளை வழங்கினார்.













# மரபுச் சுற்றுலா மேம்பாடு, பேணுலுக்கு ஒத்துழைப்பை நாடினார் அரச அதிபர்!

யாழ்ப்பாண மாவட்டத்தில் உலக வங்கியால் எண்ணக்கரு ரீதியாக தெரிவு செய்யப்பட்ட செயற்றிட்டங்கள் தொடர்பாக பங்குதாரர்களுடனான கலந்துரையாடல் அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று (29) அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.



வடக்குக் கிழக்கு மாகாணங்களின் நிலையான பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிக்கும் வகையில் உட்கட்டுமாணம் மற்றும் சுற்றுலாத் துறையை விருத்தி செய்தல் தொடர்பில் ஜனாதிபதியின் வழிகாட்டலுக்கு அமைவாக, யாழ்ப்பாண மாவட்டத்தில் உலக வங்கியால் உட்கட்டுமானம் மற்றும் சுற்றுலா அபிவிருத்தியுடன் தொடர்புபடும் வகையில் பின்வரும் செயற்றிட்டங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண கோட்டை மற்றும் பண்ணை கரையோர பூங்கா அபிவிருத்தி, யாழ்ப்பாண பழைய கச்சேரியும் அதன் சூழல் அபிவிருத்தி, சிறுத்தீவு சுற்றுலா அபிவிருத்தி, குருநகர் மீன்பிடி படகுத்தள அபிவிருத்தி, யாழ்ப்பாண நகர வடிகால் அமைப்புச் செயற்றிட்டம், யாழ்ப்பாண நகர கழிவு நீர் முகாமைத்துவ செயற்றிட்டம், நெடுந்தீவு வீதி அபிவிருத்தி மற்றும் குடி தண்ணீர் விநியோக மேம்பாடு, நெடுந்தீவு, குறிகட்டுவான், ஊர்காவற்றுறை, காரைநகர் படகுத்தளங்களின் அபிவிருத்தி.

இந்தத் திட்டங்களின் விரிவான செயற்றிட்டங்கள் மற்றும் மதிப்பீட்டுகள் தயாரித்தல், சாத்திய நிலமைகள், பங்குதாரர்கள் பங்களிப்பு போன்றவை தொடர்பாக அரச அதிபர் தலைமையில் ஆராயப்பட்டது.

இதன் போது கருத்து தெரிவித்த அரச அதிபர், இந்தத் திட்டங்கள் மக்களுக்குரிய செயற்றிட்டங்கள். எல்லாத் தரப்பினருக்கும் உரிய செயற்றிட்டங்கள் என்பதாலும் - மரபுச் சுற்றுலா மேம்பாடு மற்றும் தொடர்ச்சியாக பேணுதல் என்ற அடிப்படையில் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரச அதிபர் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி), மாவட்ட பிரதம பொறியியலாளர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், யாழ்ப்பாணம், நெடுந்தீவு, மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர்கள், காரைநகர் உதவிப் பிரதேச செயலாளர், யாழ்ப்பாண மாநகர பிரதம பொறியியலாளர், நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள், தொல்லியல் திணைக்கள அதிகாரிகள், பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர், துறைசார் உயர்அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# டிறிபேர்க் கல்லூரி மாணவனுக்கு உயர்தரக் கற்றலுக்கு உதவிகள்!

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் அண்மையில் வெளியான க. பொ. த.சாதாரண பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் அதிசிறப்பு சித்தி பெற்ற பாஸ்கரன் கிந்துசன் என்னும் மாணவனுக்கு புலம்பெயர் நாடுகளில் உள்ள கல்லூரியின் பழைய மாணவர்களால் சைக்கிள் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.



அத்துடன் க. பொ.த. உயர்தர வகுப்பில் கற்கும் காலத்துக்கான மாதாந்த உதவித் தொகையும் வழங்கப்பட்டது.

தென்மராட்சி சமூக அபிவிருத்தி மேம்பாட்டு அமையத்தின் வேண்டுகோளை அடுத்து நுணாவிலைச் சேர்ந்த, தற்போது ஆஸ்ரேலியாவில் வசிக்கும் டாக்டர் கந்தையா சந்திரனின் ஏற்பாட்டில்,

சைக்கிள் அன்பளிப்பு - திருமதி விஜயலட்சுமி தர்மராஜா (ஆஸ்ரேலியா) டிறிபேர்க் கல்லூரியின் பழைய மாணவியும், ஆசிரியராகவும் கடமையாற்றியவர்.

மாணவனின் உயர்தர முதலாம் வருடத்துக்கான கல்விச் செலவீனங்கள் - திருமதி நளாயினி சண்முகலிங்கம் (ஆஸ்ரேலியா) டிறிபேர்க் கல்லூரியில் ஆரம்பப் பிரிவு அதிபராக கடமையாற்றி மறைந்த அமரர் வேலுப்பிள்ளை மாஸ்ரரின் மகள்.

அடுத்த 6 மாதங்களுக்கான நிதிப் பங்களிப்பு - வே. சிவகுமார் (ஆஸ்ரேலியா) டிறிபேக்கல்லூரியில் ஆரம்பப் பிரிவு அதிபராக கடமையாற்றி மறைந்த அமரர் வேலுப்பிள்ளை மாஸ்ரரின் மகன்.

அடுத்த 6 மாதங்களுக்கான நிதி உதவி - திருமதி விக்னேஸ்வரி பத்மநாதன் (ஆஸ்திரேலியா) ஆகியோர் வழங்கியிருந்தனர்.

அமையத்தின் நிறுவுனர் ம. நடனதேவன் மற்றும் உறுப்பினர் து. கணேஸ்குமார் ஆகியோர் உதவிகளை மாணவனிடம் வழங்கி வைத்தனர்.



# புலோப்பளை இராயப்பர் ஆலயம் புனரமைக்கப்பட்டுத் திறந்துவைப்பு

புனரமைக்கப்பட்ட பளை, புலோப்பளை புனித இராயப்பர் ஆலய திறப்பு விழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை (28) இடம்பெற்றது.

யாழ் ஆயர் அதி வண. கலாநிதி பேரருட்திரு ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.











# பொலனறுவையில் சிவலிங்கம் பிரதிஷ்டை!

(வி.ரி. சகாதேவராஜா)

பொலநறுவ மாவட்டத்தில் ஒரு சிங்கள கிராமத்தில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.


பொலனறுவையில் அமைந்துள்ள நாமல் போக்குல பெரும்பான்மையாக சிங்கள மக்கள் வசிக்கும் ஒரு கிராமமாகும். அங்கு சில தமிழ் குடும்பங்களும் கூடி வாழ்ந்து வருகின்றன.

அந்த கிராமத்தில் காளியம்மன் ஆலயம் ஒன்றுள்ளது. இது அந்தப் பகுதியினரால் பக்தி பூர்வமாக வழிபட்டுத் தொன்மையுடன் பராமரிக்கப்படும் ஒரு முக்கியமான தலம்.

இவ்வாலயத்தில் ஓர் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இந்த புனித சிவலிங்கத்தை ஆஸ்திரேலியாவில் வாழும் சிவதிரு இளங்கோ வழங்கி உதவியுள்ளார்.

தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலப் பணிப்பாளர் கண. இராசரெத்தினத்தின் வழிகாட்டலில் செயலாளர் பா.சந்திரேஸ்வரன் அந்த நிகழ்வை நெறிப்படுத்தியுள்ளார்.





# தடம் புரண்டு விபத்துக்குள்ளானது டிப்பர்!

(உடப்பு க.மகாதேவன்)

கெப்பெட்டிபொல பொரலந்த வீதி உடுபாதென பிரதேசத்தில் டிப்பர் ஒன்று இன்று (30) காலை தடம் புரண்டு விபத்துக்குள்ளானது. சாரதி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர்கள் இன்று தமது கடமைகளைப் பொறுப்பேற்றனர்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டத்துக்கு நிர்வாகம் மற்றும் காணி விவகாரங்களுக்குப் பொறுப்பாக மேலதிக அரச அதிபர்கள் பொது நிர்வாக அமைச்சால் நியமிக் கப்பட்டுள்ள நிலையில் குறித்த இருவ ரும் இன்று (30) புதன்கிழமை மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் முன்னிலையில் தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டனர்.மன்னார் பிரதேசச் செயலாளராக கடமையாற்றிய மனோகரன் பிரதீப் மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் - நிர்வாகத்துக்கும் மடு பிரதேசச் செயலாளராக கடமையாற் றிய கீ.பீட் நிஜாகரன் மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் - காணி பதவிக்கு நியமிக் கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் குறித்த இரு மாவட்ட மேலதிக அரச அதிபர்களும் இன்றைய தினம் புதன்கிழமை (30) மன்னார் மாவட்ட செயலகத்துக்கு வருகை தந்து மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் முன்னிலையில் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

இதன்போது குறித்த இரு மேலதிக அரச அதிபர்களையும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மாலை அணிவித்து வரவேற்றனர். இதன்போது மன்னார் மாவட்டச் செயலகம், மன்னார், மடு பிரதேச செயலக பணியாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், அதிகாரிகள் கலந்து கொண்டு வரவேற்றனர்.

மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் - நிர்வாகத்துக்கு நியமிக்கப்பட்ட மனோகரன் பிரதீப் 2012 இல் இலங்கை நிர்வாக சேவையில் இணைந்து, 2013 தொடக்கம் 2015 வரை உதவி பிரதேச செயலாளராக மாத்தளை மாவட்டத்தில் ரத்தோட்டை பிரதேச செயலகத்திலும், 2015 முதல் 2020 வரை உதவி பிரதேச செயலாளராக கண்டாவளை பிரதேச செயலகத்திலும், 2020 தொடக்கம் பிரதேச செயலாளராக மன்னாரிலும் பணியாற்றி வந்த நிலையிலே மேலதிக அரச அதிபர் நிர்வாகத்துக்குப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் - காணிக்கு நியமிக்கப்பட்டுள்ள கீ.பீட் நிஜாகரன் 2013 இல் இருந்து 2020-08-09 வரை திருகோணமலை உதவி காணி ஆணையாளராகவும், 2020-08-10 இருந்து 2021-01-19 வரை முல்லைத்தீவு கமநல அபிவிருத் தித் திணைக்கள உதவி ஆணையா ளராகவும், 2021-01-20 இருந்து 2021-02-28 வரை மன்னாரில் கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளராகவும் பணியாற்றியவர். 2021-03-01 முதல் அவர் மடுப் பிரதேச செயலாளராக பணியாற்றிவந்த நிலையிலே மாவட்ட மேலதிக அரச அதிபர் காணிக்கு பதவி உயர்வு பெற் றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.





# அணு ஆயுத மிரட்டலுக்கு இந்தியா அடிபணியாது

## மக்களவையில் பிரதமர் மோடி உரை

"ஒபரேஷன் சிந்தூர் மூலம் அணு ஆயுத மிரட்டல் இனி வேலை செய்யாது என்பதை இந்தியா நிரூபித்துள்ளது. அதோடு, பாகிஸ்தானின் பல விமானப் படைத் தளங்கள் இப்போது வரை ஐசியுவில் உள்ளன."

– இவ்வாறு மக்களவையில் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

ஒபரேஷன் சிந்தூர் தொடர்பான விவாதத்தில், எதிர்க்கட்சிகள் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்கு பதில் அளிக்கும் விதமாக நாடாளுமன்ற மக்களவையில் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். அப்போது அவர் மேலும் உரையாற்றுகையில்,

"ஏப்ரல் 22 ஆம் திகதி பஹல்காமில் நடந்தது கொடுமையின் உச்சம். அப்பாவி மக்களிடம் அவர்களின் மதம் என்ன என்று கேட்டு பயங்கரவாதிகள் சுட்டுக் கொன்றார்கள். இது இந்தியாவை, வன்முறை எனும் நெருப்பில் தள்ளுவதற்கான திட்டமிட்ட சதி. இது இந்தியாவில் கலவரங்களை ஏற்படுத்துவதற்கான திட்டமிட்ட சதி. இந்த சதியை நாடு ஒற்றுமையுடன் முறியடித்ததற்காக நாட்டு மக்களுக்கு நன்றி கூறுகிறேன்.

இந்த அவையில் இந்தியாவின் தரப்பை முன்னிறுத்த நான் இங்கே நிற்கிறேன். இந்தியாவின் பக்கம் என்ன நடந்தது என்பதை பார்க்காதவர்களுக்கு அதைக் காட்ட நான் இங்கே நிற்கிறேன். ஏப்ரல் 22 ஆம் திகதி நான் வெளிநாட்டில் இருந்தேன். பஹல்காம் தாக்குதலை அறிந்தவுடன் நான் நாடு திரும்பினேன். பாதுகாப்புக்கான அமைச்சரவையைக் கூட்டினேன். பயங்கரவாதத்துக்கு உரிய பதிலடி கொடுக்கப்பட வேண்டும் என்றும், இது எங்கள் தேசிய உறுதிப்பாடு என்றும் தெளிவான அறிவுறுத்தல்களை வழங்கினோம்.

இராணுவம் சுதந்திரமாக செயல்பட அனுமதி அளிக்கப்பட்டது. எங்கே, எப்போது, எப்படி, எந்த முறையில் தாக்கதலை நடத்துவது என்பதை இராணுவம் முடிவு செய்ய வேண்டும் என்று கூறப்பட்டது. அனைத்தும் தெளிவாகக் கூறப்பட்டன. பயங்கரவாதிகள் தண்டிக்கப்பட்டதற்காக நாங்கள் பெருமைப்படுகிறோம். பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு மூளையாக இருந்தவர்கள் இன்றுவரை தூக்கமில்லாத இரவுகளைக் கழிக்கும் அளவுக்கு எங்கள் தண்டனை இருந்தது.

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்குப் பிறகு இந்தியா ஒரு பெரிய நடவடிக்கையை எடுக்கும் என்ற எண்ணம் பாகிஸ்தான் படைகளுக்கு இருந்தது. அவர்கள் அணு ஆயுத அச்சுறுத்தல்களை தொடங்கினர். மே 6-7 ஆகிய திகதிகளுக்கு இடைப்பட்ட இரவில் திட்டமிட்டபடி நமது இராணுவம் தாக்குதலை நடத்தியது. பாகிஸ்தானால் எதுவும் செய்ய முடியவில்லை. நமது ஆயுதப் படைகள் 22 நிமிடங்களுக்குள் துல்லிய தாக்குதல்களை நடத்தி பழிதீர்த்தன.

அணு ஆயுத மிரட்டல் இனி வேலை செய்யாது என்பதை இந்தியா நிரூபித்துள்ளது. அதோடு, பாகிஸ்தானின் விமானப் படைத் தளங்களும் சொத்துகளும் பெரும் சேதத்தை சந்தித்துள்ளன. இப்போது வரை அவர்களின் பல விமான தளங்கள் ஐ.சி.யுவில் உள்ளன. பாகிஸ்தானில் பயங்கரவாதத் தளங்கள் அழிக்கப்பட்டன. இது நடக்கும் என யாரும் கற்பனை செய்து பார்க்கவில்லை. பஹாவல்பூரும் முரிட்கேவும் தரைமட்டமாக்கப்பட்டன.

கடந்த 10 ஆண்டுகளாக நாம் செய்த தயாரிப்புகள் காரணமாகவே, நமது தாக்குதல்கள் மிகத் துல்லியமாக நடந்தன. இல்லாவிட்டால், நாம் எவ்வளவு இழப்பைச் சந்தித்திருப்போம் என்பதை கற்பனை செய்து பார்க்க முடியாது. ஒபரேஷன் சிந்தூர் மூலம் தன்னிம்பிக்கை கொண்ட இந்தியாவின் சக்தியை உலகம் அங்கீகரித்துள்ளது. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ட்ரோன்கள், ஏவுகணைகள் பாகிஸ்தானின் ஆயுத அமைப்பை அம்பலப்படுத்தின.

ஒபரேஷன் சிந்தூர் 3 விஷயங்களை தெளிவுபடுத்தி உள்ளது. ஒன்று, இந்தியா மீது பயங்கரவாத தாக்குதல் நடத்தப்பட்டால் நாம் நமது சொந்த முறையில் நமது நேரத்துக்கு ஏற்ப பதிலடி கொடுப்போம். இரண்டு, அணு ஆயுத மிரட்டல் இனி இந்தியாவிடம் வேலை செய்யாது. மூன்று, பயங்கரவாதத்தை ஆதரிக்கும் அரசாங்கங்களையும் பயங்கரவாத அமைப்புகளையும் தனித்தனியாக பார்க்க மாட்டோம் என்பதே அவை." என்று தெரிவித்தார்.



# ஜார்க்கண்டில் பஸ் மீது லொறி மோதி விபத்துக்குள்ளானதில் 18 பக்தர்கள் பலி

ஜார்க்கண்டில் பஸ் மீது லொறி மோதி விபத்துக்குள்ளானதில் 18 பக்தர்கள் உயிரிழந்துள்ளனர்.

ஜார்க்கண்ட் மாநிலம் தேவ்கரில் புகழ்பெற்ற வைத்தியநாதர் கோயில் உள்ளது. இக்கோயிலுக்கு புனித ஷ்ரா வண மாதத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் புனித கங்கை நீரை எடுத்து வந்து சிவனுக்கு அபிஷேகம் செய்வது வழக்கம். இது கன்வர் யாத்திரை என அழைக்கப்படுகிறது.

இந்நிலையில் இக்கோயிலுக்கு சுமார் 35 பக்தர்கள் சென்ற ஒரு பஸ்ஸ/ம் எதிரில் வந்த லொறியும் நேருக்கு நேர் மோதிக்கொண்டன. இந்த கோர விபத்தில் 18 பக்தர்கள் உயிரிழந்தனர். மேலும் 20 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

காயம் அடைந்தவர்கள் தேவ்கர் சதார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக கூறப்படுகிறது. இறந்தவர்களின் உடல்களை அடையாளம் காணும் பணி நடந்து வருகிறது.

### ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கை:

# படைகளின் கைகளை அரசு கட்டிப்போட்டது

## மக்களவையில் ராகுல் காந்தி சாடல்



பாகிஸ்தானுக்கு எதிரான ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது, நமது படைகளின் கைகளை அரசே கட்டிப் போட்டுள்ளது என்று மக்களவையில் ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

ஒபரேஷன் சிந்தூர் தொடர்பான விவாதத்தின்போது எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி நாடாளுமன்ற மக்களவையில் மேலும் உரையாற்றுகையில்,

“ஒபரேஷன் சிந்தூர் தொடங்கப்படுவதற்கு முன்பே, நமது பாதுகாப்புப் படைகளுடனும் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய அரசுடனும் பாறையைப் போல் உறுதியாக நிற்போம் என்று அனைத்து எதிர்க் கட்சிகளும் உறுதி அளித்தன. நான் எந்த இராணுவ வீரருடன் கைகுலுக்கும் போதும் அவரை நாட்டுக்காக போராட தயாராக இருக்கும் ஒரு புலியைப் போலவே பார்க்கிறேன். இருப்பினும், ஒரு புலிக்கு முழுமையான சுதந்திரம் தேவை. நீங்கள் அதை கட்டிப்போட முடியாது.

இரண்டு முக்கிய வார்த்தைகள் உள்ளன. ஒன்று, அரசியல் விருப்பம், மற்றொன்று செயல்பாட்டு சுதந்திரம் நீங்கள் நமது பாதுகாப்புப் படையை போருக்கு இட்டுச் செல்வதாக இருந்தால், முதலில் உங்களிடம் 100 வீத அரசியல் விருப்பம் இருக்க வேண்டும்.

பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் அவையில் பேசும்போது, ஒபரேஷன் சிந்தூர் அதிகாலை 1.05 மணிக்கு தொடங்கி, 22 நிமிடங்கள் நீடித்தது என்று கூறினார். பின்னர், அதிர்ச்சியூட்டும் ஒரு விஷயத்தை அவர் கூறினார். அதாவது, அதிகாலை 1.35 மணிக்கு இந்திய டி.ஜி.எம்.ஓ, பாகிஸ்தான் டி.ஜி. எம்ஓவை அழைத்து நாங்கள் போரை தீவிரப்படுத்த விரும்பவில்லை என்றும் இராணுவ இலக்குகள் குறிவைக்கப்படவில்லை என்றும் மற்ற இலக்குகளை மட்டுமே குறிவைத்ததாகவும் தெரிவித்ததாகக் கூறினார்.

நீங்கள் பாகிஸ்தானுக்குள் தாக்குதல் நடத்த உத்தரவிட்டீர்கள். ஆனால், அதன் வான் பாதுகாப்பை தாக்க வேண்டாம் என்று நமது விமானிகளுக்கு உத்தரவிட்டுள்ளீர்கள். இத்தகைய சூழலில் நமது விமானங்கள் சுட்டு வீழ்த்தப்படுவது உறுதி. உங்கள் செயல் மூலம் நீங்கள் நமது விமானிகளின் கைகளைக் கட்டிவிட்டீர்கள்.” என்று தெரிவித்தார்.




# ஜப்பானைத் தாக்கியது சுனாமி வெள்ளத்தில் மூழ்கிய ரஷ்யா

ரஷ்யாவில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நில அதிர்வின் காரணமாக, ஜப்பானின் ஹொக்கைடோ பகுதியை சுனாமி தாக்கியுள்ளது.

அந்நாட்டு நேரப்படி, முற்பகல் 10.30 மணிக்கு சுனாமி தாக்கியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சுமார் 04 மீற்றர் உயரத்துக்கு அலைகள் மேலெழுந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஜப்பானில் ஏற்பட்ட சுனாமி காரணமாக ரயில் சேவைகள் தடைபட்டுள்ளதாக ஜப்பானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜப்பானின் டோகைடோ, ஜோபன் உள்ளிட்ட தொடருந்து மார்க்கத்தில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, சுனாமி எச்சரிக்கையைத் தொடர்ந்து ஃபுகுஷிமா டாய்ச்சி மற்றும் ஃபுகுஷிமா அணுமின் நிலையங்களில் இருந்த ஊழியர்கள் பாதுகாப்பான, உயரமான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர் என டோக்கியோ எலக்ட்ரிக் பவர் கம்பெனி (டெப்கோ) கூறியுள்ளது.

முன்னதாக, ரஷ்யாவின் கிழக்கு கடற்கரையில் 8.8 மெக்னிடியூட் அளவில் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதனால், ரஷ்யா, ஜப்பான் மற்றும் அமெரிக்காவுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் ரஷ்யாவின் கிழக்கு கடற்கரையில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்திற்குப் பிறகு கம்சட்கா தீபகற்பத்தில் 13 அடி உயர சுனாமி அலை தாக்கியதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சுனாமி அலைகளால் ரஷ்ய நகரம் வெள்ளத்தில் மூழ்கியதாக அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரஷ்யத் துறைமுக நகரமான செவேரோ-குரில்ஸ்கின் ஒரு பகுதியை சுனாமி அலை தாக்கியதாக ரஷ்ய அவசரகால அமைப்பு தெரிவித்துள்ளது.







# பாலஸ்தீன அரசை அங்கீகரிப்போம்!

## பிரித்தானியப் பிரதமர் அறிவிப்பு



பாலஸ்தீன காசாவில் நிலவும் பயங்கரமான சூழ்நிலையை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில், இஸ்ரேல் கணிசமான நடவடிக்கைகளை எடுக்காவிட்டால், எதிர்வரும் செப்டம்பர் மாதத்தில் பாலஸ்தீன அரசை பிரித்தானியா அங்கீகரிக்கும் என்று பிரித்தானியப் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் எச்சரித்துள்ளார்.

இஸ்ரேல் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொள்ள வேண்டும்.

தீர்வை வழங்கும் நீண்டகால நிலையான அமைதிக்கு உறுதியளிக்க வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபை உதவி வழங்கலை மீண்டும் ஆரம்பிக்க அனுமதிக்க வேண்டும்.

இந்த நிபந்தனைகளை இஸ்ரேல் பூர்த்தி செய்ய மறுத்தால் எதிர்வரும் செப்டம்பரில் பிரித்தானியா பாலஸ்தீன அரசை அங்கீகரிக்கும் என்றும் கெய்ர் ஸ்டார்மர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வாரம் பிரான்ஸ்/ம் எதிர்வரும் செப்டம்பரில் பாலஸ்தீன அரசை அதிகாரபூர்வமாக அங்கீகரிப்பதாக அறிவித்த நிலையிலேயே, பிரித்தானிய பிரதமரின் அறிவிப்பும் வெளியாகியுள்ளது.

எனினும் பிரித்தானியாவின் இந்த அறிவிப்பு, ஹமாஸின் கொடூரமான பயங்கரவாதத்திற்கு வெகுமதி அளிக்கிறது என்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறியுள்ளார்.

# இஸ்ரோ - நாசா இணைந்து உருவாக்கிய செயற்கைக்கோள் இன்று விண்ணில் பாயும்





புவி கண்காணிப்புக்காக நாசாவுடன் இணைந்து உருவாக்கிய நிசார் செயற்கைக்கோளை ஜி.எஸ்.எல்.வி. ராக்கெட் மூலமாக இஸ்ரோ இன்று மாலை விண்ணில் செலுத்துகிறது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) மற்றும் அமெரிக்க விண்வெளி ஆய்வு மையம் (நாசா) சேர்ந்து பூமியின் மேற்பரப்பு மாற்றங்களை கண்காணிப்பதற்காக நிசார் என்ற செயற்கைக்கோளை 12,000 கோடி இந்திய ரூபாவில் வடிவமைத்துள்ளன.

பல்வேறுகட்ட சோதனைகள் முடிந்த நிலையில் நிசார் செயற்கைக்கோள் ஜி.எஸ்.எல்.வி எப்-16 ராக்கெட் மூலமாக ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள 2 ஆவது ஏவுதளத்தில் இருந்து இன்று மாலை 5.40 மணிக்கு விண்ணில் ஏவப்பட உள்ளது. ராக்கெட் ஏவுதலின் 27 மணி நேரம் 30 நிமிட கவுன்ட்டவுன் நேற்று தொடங்கியது. தொடர்ந்து எரிபொருள் நிரப்புதல் உட்பட இறுதிக்கட்ட பணிகளில் விஞ்ஞானிகள் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

இந்த செயற்கைக்கோள் புவியில் இருந்து 743 கிலோ மீற்றர் தொலைவில் சூரிய ஒத்திசைவு சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட உள்ளது. இது புவி கண்காணிப்புக்காக தயாரிக்கப்பட்ட அதிநவீன ரேடார் செயற்கைக்கோளாகும். இதன் எடை 2,392 கிலோ. ஆயுட்காலம் 5 ஆண்டுகளாகும். இதன்மூலம் புவியின் சுற்றுச்சூழல் அமைப்புகள், பருவநிலை மாற்றங்கள், பேரிடர் மேலாண்மை உட்பட பல்வேறு அம்சங்கள் குறித்த தகவல்களைப் பெறமுடியும்.

அதாவது, பூமியின் மேற்பரப்பில் ஏற்படும் மிகச்சிறிய மாற்றங்களைக் கூட கண்டறிய முடியும். இந்த செயற்கைக்கோள் முழு பூமியையும் 12 நாள்களுக்கு ஒருமுறை சுற்றிவந்து துல்லியமான தரவுகள் மற்றும் உயர் தெளிவுத்திறன் கொண்ட படங்களை இரவு, பகல் என அனைத்து சீதோஷ்ண நிலைகளிலும் வழங்கும்.


நிசார் அனுப்பும் தகவல்களை உலகம் முழுவதும் உள்ள ஆராய்ச்சியாளர்களும் பெறமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் - 03

கனடா முரசு

புதன்கிழமை 30/07/2025

## கனடா விமான விபத்தில் கேரள இளைஞர் உயிரிழப்பு



C2 ▶



# நாடாளுமன்ற உறுப்பினராக மட்டுமே எமது கடமையைச் செய்திருந்தேன்

## அமைச்சர் கரி ஆனந்தசங்கரி தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினரென கூறப்படும் ஒருவரின் குடியேற்ற விண்ணப்பத்தை ஆதரித்து கடிதங்கள் எழுதிய போது, தாம் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக மட்டுமே தமது கடமையை செய்திருந்தேன் என்று கனேடியபொதுப்பாதுகாப்புஅமைச்சர் கரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

கனடாவில்பயங்கரவாதஅமைப்பாக பட்டியலிடப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர் என அந்நாட்டு அதிகாரிகளால் அடையாளம் காணப்பட்டுள்ள ஒருவரது குடியுரிமை விண்ணப்பத்தை அங்கிகரிக்குமாறு அமைச்சர் கரி ஆனந்தசங்கரி கடிதம் அனுப்பியமை குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர் எனக் கூறப்படும் இலங்கையைச் சேர்ந்த செந்தூரன் செல்வகுமாருக்கு கனேடிய குடியுரிமை வழங்குமாறு கரி ஆனந்தசங்கரி இரண்டு கடிதங்களை அனுப்பியதாகக் கூறப்படுகிறது.

குறித்த கடிதங்கள் 2016 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் கனடா எல்லை சேவைகள் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது.

C2 ▶

# கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா கடற்கரைக்கு சுனாமி எச்சரிக்கை









ரஷ்யாவின் கடற்கரைக்கு அருகே ஏற்பட்ட 8.7 ரிக்டர் அளவிலான சக்தி வாய்ந்த நிலநடுக்கம் காரணமாக, கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் பெரும்பாலான கடற்கரை பகுதிகளுக்கு சுனாமி ஆலோசனை அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் சுனாமி எச்சரிக்கை அமைப்பின் தகவல்படி, ‘சுனாமி ஆலோசனை’ என்பது கடலோரத்தில் தீவிரமான அலையோட்டங்கள் உருவாகலாம் என்பதையும், மக்கள் கரையோரங்களுக்கு அருகில் செல்ல வேண்டாம் என்பதையும் குறிக்கிறது.

வடக்குக் கரை மற்றும் ஹைடாக்வாய் தீவுகள் மத்திய கரை மற்றும் வடகிழக்கு வான்கூவர் தீவுகளின் கரை (கிடிமாட், பெல்லா கூலா, போர்ட் ஹார்டி ஆகிய இடங்களும் உட்பட) வான்கூவர் தீவின் மேற்கு கரை (கேப் ஸ்காட் முதல் போர்ட் ரென்ப்ரூ வரை) ஜுவான் டி ஃபூகா நீரிணை (ஜோர்டன் ரிவர் முதல் கிரேட்டர் விக்டோரியா வரையிலும்

C2 ▶

# முக்கிய மருந்தொன்றுக்கு கனடாவில் தட்டுப்பாடு

கனடாவில், முக்கியமான வலி நிவாரணி ஒன்றிற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக கனடா சுகாதாரத் துறையின் இணையதளம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ylenol 3 மற்றும் Percocet என்னும் வலி நிவாரணிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள கனேடிய மருந்தகக் கூட்டமைப்பின் மூத்த இயக்குநரான Sadaf Faisal "மருந்தகங்களில் இந்த மருந்துகளுக்கு மாற்றாக வேறு மருந்துகள் கிடைக்கும் என தெரிவித்துள்ளார்.



மேலும், மருந்துகள் முழுமையாக முடியும் வரை காத்திருக்க வேண்டாம் எனவும், முன்கூட்டியே சென்று இந்த மருந்துகளை வாங்கி வைத்துக்கொள்ளுமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வலி நிவாரணிகளை தயாரிக்கத் தேவையான உட்பொருட்கள் வெளிநாடுகளிலிருந்து வந்து சேருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதே மருந்து தட்டுப்பாட்டுக்குக் காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

Paracetamol என்னும் வலி நிவாரணி மற்றும் காய்ச்சலைக் குறைக்கும் மாத்திரை அல்லது மருந்துகளைத் தயாரிக்கத் தேவையான உட்பொருள்கள், பெரும்பாலும் இந்தியா, சீனா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளிலிருந்துதான் உலகம் முழுவதற்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கனடா விமான விபத்தில் கேரள இளைஞர் உயிரிழப்பு

கனடாவில் சிறிய ரக விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த கேரள இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார்.

கனடாவின் Newfoundland and Labrador மாகாணத்தில், வான்வழி ஆய்வு நிறுவனம் ஒன்றில் தொழில்நுட்ப வல்லுநராக பணியாற்றிவந்தவர் கௌதம் சந்தோஷ் (வயது 27).

இந்தியாவின் கேரள மாநிலத்தைச் சேர்ந்த கௌதம், சனிக்கிழமையன்று நிகழ்ந்த விமான விபத்தொன்றில் பலியானார்.

அவர் பயணித்த விமானம் விழுந்து நொறுங்கியதில், அந்த விமானத்தின் விமானியான 54 வயது நபரும், கௌதமும் பலியாகிவிட்டார்கள்.

ரொரன்றோவிலுள்ள இந்திய தூதரகம் இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்தியில், விமான விபத்தில் பலியான கௌதம்





குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதாகவும், அவரது குடும்பத்துக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இம்மாதம் 8ஆம் திகதி விமானப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது, மற்றொரு பயிற்சி விமானத்துடன் மோதி பலியான ஸ்ரீஹரி சுகேஷ் என்பவரும் கேரளாவைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**நாடாளுமன்ற உறுப்பினராக...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

மேற்படி விடயம் தொடர்பில் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு முதல் முறையாக பதிலளித்த போதே கரி ஆனந்தசங்கரி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தேர்ந்தெடுக்கப்பட்ட எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரின் முக்கிய பொறுப்புகளில் ஒன்று, உதவி கோருவோருக்கு சேவைகளை வழங்குவதாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி குற்றம் சுமத்தப்பட்ட விடயத்தில், தாம் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக தமது கடமைகளை செய்தேன் என்று கனேடிய பொதுப் பாதுகாப்பு அமைச்சர் கரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், பொது பாதுகாப்பு அமைச்சர் கரி ஆனந்தசங்கரி மீது தமக்கு பூரண நம்பிக்கை உண்டு, குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் கனடா பிரதமர் மார்க் கார்னி நிராகரித்துள்ளார்.

கரி ஆனந்த சங்கரி தொடர்பில் கனடிய அரசியல் பரப்பில் கடுமையான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று வரும் நிலையில் கனடா பிரதமர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

**கனடாவின்...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

சானிச் குடாநாட்டும் அடங்கும்)

இதேவேளை, மெட்ரோ வான்கூவர், கற்பகத் தீவுகள் (Gulf Islands), ஸ்டிரெய்ட் ஆஃப் ஜார்ஜியா மற்றும் ஜான்ஸ்டோன் ஸ்டிரெய்ட் ஆகிய பகுதிகள் இந்த ஆலோசனையில் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அவதானிக்க வேண்டிய விடயங்கள்:

- கடலோரங்களில் மிகுந்த அலையோட்டங்கள் ஏற்படக்கூடும்.
- கடலில், கடற்கரையில் உள்ளவர்கள் உடனடியாக வெளியேற வேண்டும்.
- இந்த அலையோட்டங்கள் மனிதர்களுக்கு உயிரிழப்பு அல்லது காயம் ஏற்படுத்தும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடும்.
- படகு துறைமுகங்கள், வளைகுடாக்கள், குறுக்கிணைகள் போன்ற பகுதிகளில் மிக ஆபத்தான நிலை காணப்படும்.

தற்போது உருவாகியுள்ள சுனாமி, கடலோர பகுதிகளில் பலத்த அலையோட்டங்களை ஏற்படுத்தக் கூடும் என தேசிய சுனாமி எச்சரிக்கை மையம் அறிவுறுத்தியுள்ளது.



# இஸ்ரேலுக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்யும் கனடா

இஸ்ரேலுக்கு தொடர்ந்து ஆயுதங்களை ஏற்றுமதி செய்யும் ஆதாரங்கள் வெளியாகியுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

கனடா அரசு ஜனவரி 2024 முதல் இஸ்ரேலுக்கான ஆயுத ஏற்றுமதியை நிறுத்திவிட்டதாக கூறியிருந்தது.

ஆனால், சமீபத்தில் வெளியான இஸ்ரேல் வரிவிதி ஆணையத்தின் பதிவுகள் மற்றும் சர்வதேச கப்பல் அனுப்பும் ஆவணங்கள், கனடாவிலிருந்து இஸ்ரேலுக்கு தொடர்ந்து ரகசியமாக ஆயுதங்கள் மற்றும் வெடிப்பொருள்கள் அனுப்பப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துகின்றன.

World Beyond War, Palestinian Youth Movement, Canadians for Justice and Peace in the Middle East மற்றும் Independent Jewish Voices ஆகிய அமைப்புகள் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளன.

இது, இஸ்ரேலின் இன அழிப்புக்கு கனடா தொடர்ந்தும் ஆதரவு வழங்குவதைக் காட்டும் தெளிவான ஆதாரம் என பாலஸ்தீன இளைஞர் இயக்கத்தின் யாரா ஷெளஃபானி கூறியுள்ளார்.

2025 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாத பதிவில் மட்டும் 1.75 லட்சம் வெடிபொருள்கள் மற்றும் ஆயுதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. ஜூன் மாதத்தில் மேலும் 15,000 ஆயுத பாகங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

Montreal - Tel Aviv இடையே கார்ட்ரிட்ஜ்கள் மூன்று முறை அனுப்பப்பட்டுள்ளன. இது General Dynamics OTS, Quebec நிறுவனத்துடன் தொடர்புடையது என்று குறிப்பிடப்படுகிறது.

இஸ்ரேலுக்கு காசா போரில் பயன்படுத்தக்கூடிய புதிய அனுமதிகள் ஏதும் வழங்கப்படவில்லை என கனடா அரசு தெரிவித்துள்ளது.

ஆனால், 164 ஏற்றுமதி அனுமதிகள் இன்னும் செல்லுபடியாக உள்ளன என்பது மோசமான மறைப்புத் தன்மையை காட்டுகிறது என ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

